08.01.2025 Mcop . 209 of 2023 ம.சா.1 சண்முகத்தாய்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் மகனின் வயது, வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியாது. விபத்து சமயம் என் மகனுக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. ஒட்டுனர் உரிமம் இருந்தது. நான் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மட்டும் தான் வாரிசு. என் கணவர் இறந்து விட்டார். என் கணவரின் இறப்புசான்று தாக்கல் செய்துள்ளேன். என் மகனின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2வதுஎதிர்மனுதாரர் வாகன உரிமையாளர் டி.என்.65.ஏபி.1293 என்ற வாகனத்தினை தகுதி சான்று இல்லாமல் ஒட்டி பாலிசி விதிமுறைகளை மீறியுள்ளதால் 3ம்எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். பாலிசி விதிமுறைகளை மீறியுள்ள காரணத்தினால் வாகன உரிமையாளரான 2ம்எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் 3ம்எதிர்மனுதாரரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.